
இலக்கியத்
தூறல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.
044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in
ISBN 978-81-2343-815-3
9788123438153
Code No. A 4040
இலக்கியத் தூறல்
தொகுப்பாசிரியர்
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

Language: Tamil

# Elakkiya Thooral

Compiled by: **Prof. R.Vishnupriya**
**Thamizh Department**
**N.G.M.College, Pollachi.**

First Edition: November, 2018
Second Edition: June, 2019
Copyright: Publisher
No. of pages: 76
Publisher:
**New Century Book House Pvt. Ltd.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Online:www.ncbhpublisher.in
ISBN: 978 - 81 -2343-815-3
Code No. A 4040
**₹ 55.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990, **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Thiruvannamalai** 04175-223449

## இலக்கியத் தூறல்

தொகுப்பாசிரியர் : முனைவர் **இரா.விஷ்ணுப்பிரியா**
தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம்., கல்லூரி, பொள்ளாச்சி.

முதல் பதிப்பு: நவம்பர், 2018
இரண்டாம் பதிப்பு: ஜூன், 2019

*அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14*
**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# பொருளடக்கம்


1. பாரதி கண்ட கல்வி — 7
டாக்டர் ந.சுப்புரெட்டியார்

2. தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள் — 16
முனைவர் இரா.ஜெயந்தி

3. சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிர்களின் வாழ்வியல் — 23
முனைவர் செல்வராஜ் ஜமுனா

4. பன்னிரு திருமுறைகளால் விழையும் அறங்கள் — 28
முனைவர் ந.பிரகாஷ்

5. துறவி தந்த கலைகள் — 34
முனைவர் பா.அருள்ஜோதி

6. மாணிக்கவாசகரின் பக்தி நெறி — 41
முனைவர் ந. ஜெயசுதா

7. அப்துல்ரகுமான் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் — 48
முனைவர் த.கீதாஞ்சலி

8. 'எரியும் பனிக்காடு' உணர்த்தும் தேயிலைத் தோட்ட வரலாற்றுப் பின்னணி — 56
முனைவர் த.பரமேஸ்வரி

9. நாட்டுப்புறவியலும் நம்பிக்கைகளும் — 63
முனைவர் ச.முத்துவேல்

10. கலைச்சொல் பயன்பாட்டு நிலை — 71
முனைவர் மு.சுகந்தி

# 9

# நாட்டுப்புறவியலும் நம்பிக்கைகளும்

முனைவர் ச.முத்துவேல்

மனிதனுக்கு ஆறறிவு, ஏனைய விலங்கு பறவைகளுக்கு ஐந்தறிவு என்பது நாம் அனைவரும் அறிந்ததே! விலங்கோடு விலங்காக குகைகளிலும் மரங்களிலும் வசித்து, நாடோடிகளாக அலைந்து திரிந்து அடிப்படைத் தேவைகளில் அதாவது உணவு, உடை, உறைவிடம் என்ற அளவில் ஆடை, உறைவிடம் தவிர்த்த உணவை மட்டுமே மூலாதாரமாகக் கொண்டு காட்டுமிராண்டிகளாகத் தன் வாழ்க்கையைத் துவங்கினான். பின்னர் குறிஞ்சி (மலையும் மலைசார்ந்த இடமும்), முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்), மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்) என்ற நிலப்பகுதியை மனிதன் அடைந்த பின்தான் ஒரு நாகரிக வாழ்க்கையைத் தொடங்க முற்பட்டான். ஆற்றங்கரை நாகரிகம் என்பது நாகரிகத்தின் தொட்டில் என்பார்கள் அறிஞர் பெருமக்கள். மலைவாசியாக, காட்டுவாசியாக, நாடோடியாக வாழ்ந்த மனிதன் இந்த மருத நிலத்தில்தான் நிரந்தரமாக ஒரு நாகரிக வாழ்க்கையை மேற்கொள்ளத் தொடங்கினான் என்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றும் இல்லை. இங்குதான் ஒரு நிலையான குடும்ப அமைப்பும், சமுதாய அமைப்பும் முறையே குழு அல்லது சமூக அமைப்புகள் தோன்றலாயின. அதன்வழி தங்களுக்குரிய நம்பிக்கைகளின் அடிப்படையிலான பழக்கவழக்கங்கள், சடங்குகள் ஆகியன தோற்றுவிக்கப்பட்டன என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக் கொள்வதாகும். நம்பிக்கையின் அடிப்படை மனிதனின் அகமனம் (Sub- conscious) ஆகும் என்பர். மூளைக்கு அகமனமானது காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை உணர்த்துகிறது. மூளையில் பதியும் அவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படும்போது அது நம்பிக்கையாகிறது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்நம்பிக்கைகள், மனித வாழ்வில் மிக இன்றியமையாதவை என்பார் ஜேம்ஸ் வின்செஸ்டர்.

மனிதனிடம் நம்பிக்கைகள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பொதுவாக நாட்டுப்புற நம்பிக்கைகளுக்கு மூவகைக் காரணங்கள் சொல்லப்படுகின்றன. 1. செய்வினை எனப்படும் மந்திரம் (Magic); 2. நாட்டுப்புற மருத்துவம் (Folk Medicine); 3.விலக்குகள் (Taboos) ஆக இச்செய்வினை, மருத்துவம், விலக்கு ஆகியவற்றின் ஆதிக்கம் குறைந்தபோது அவை பற்றிய நம்பிக்கைகள் நாட்டுப்புற நம்பிக்கைகளாக எஞ்சி நிற்கின்றன (நாட்டுப்புற நம்பிக்கைகள் ப.5) என்பார் தமிழவன் அவர்கள். ஒருவர் தான் அணிந்திருந்த பழைய துணியை இரவல் கொடுக்கக் கூடாது என்ற நம்பிக்கையானது, அப்பழந்துணியின் மூலம் அதற்குரியவருக்குத் தீவினை செய்யமுடியும் என்ற உறுதிப்பாடு தோன்றி இருக்க வேண்டும்.

மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு நல்லாதரவை வழங்கும் இத்தகைய நம்பிக்கைகள் ஒவ்வொருவரின் வாழ்விலும் இன்றியமையாததாகிறது. பல நாட்டுப்புறத்து நம்பிக்கைகளுக்கு மருத்துவமே அடிப்படையாக உள்ளது. உலகெங்கும் காணப்படுவது போலவே தமிழகத்திலும் நாட்டுப்புற நம்பிக்கைகள் உள்ளன. இதனை இக்காலத்தில் மட்டுமல்லாது சங்க காலத்தில் இருந்தே இருப்பதாக அறிந்து கொள்ள முடிகிறது. வெறியாட்டம், ஓரைபார்த்தல் போன்ற இலக்கியச் செய்திகள் இதற்குச் சான்றுகளாகும். ஆசாரக் கோவை போன்ற பிற்கால இலக்கியங்களும் இவை பற்றி விளக்கிக் கூறுகிறது. "மருத்துவ நம்பிக்கைகளை நலம் காப்பவை, நலம் போக்குபவை" என இரண்டாகப் பகுப்பர். சிறு தெய்வ வழிபாடுகள், பிரார்த்தனை, யாத்திரை, நேர்த்திக்கடன் செலுத்துதல் போன்றன நலம் காப்பவை ஆகும். ஏவல், பில்லி, சூனியம், இருமருந்து போன்றன நலம் போக்கும் நம்பிக்கைகள் ஆகும்" என்பார் டாக்டர் சு.வெங்கடேசன் அவர்கள். பல நம்பிக்கைகளுக்கு அறிவியல் ஆதாரமாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சான்றுக்கு ஒன்றைப் பார்க்கலாம். "ஏன் தெற்கே தலைவைத்துப் படுக்க வேண்டும். வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது? -காரணம் மனித உடலில் எலக்ட்ரோ மாக்னடிக் அலைகள் உள்ளன. இவற்றிற்கு மூலஸ்தானம் மூளைதான். உலகத்தை எடுத்துக்கொண்டால் அதன் மாக்னடிக் பகுதியின் மூலஸ்தானம் வடதுருவம். ஆகவே வடக்கே தலைவைத்துப் படுத்தால் மூளையின் காந்த சக்தியும் உலகத்தின் காந்த சக்தியும் மோதிக்கொண்டு மூளைக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்று விஞ்ஞானிகள் கூறுவதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சில நம்பிக்கைகளுக்கு ஆதாரமாகச் சில புராணக் கதைகளும் விளங்குகின்றன. அக்கதையை மீண்டும் நிகழ்த்துவதன் மூலம் நன்மை

கிட்டும் என்பது நம்பிக்கையாக இன்றும் வழக்கிலுள்ளது. "கொடும்பாவியை ஊரில் இழுத்துச் சென்று கொளுத்தினால் மழை பெய்யும்" என்பது நம்பிக்கை. இந்திரன்தான் நீர், நிலம், காற்று, ஒளி, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களுக்கும் அதிபதி. ஒரு சமயம் ஒரு கொடுமையான பாவத்தைச் செய்த அரக்கன் ஒருவன் இந்திரனை எதிர்த்துப் போர் செய்து தோல்வியுற்றானாம். அந்தக் கொடுமையான அரக்கனின் உருவத்தைச் செய்து தெருத் தெருவாக இழுத்து அவனை அவமானப் படுத்தி, பின் தீயினால் கொளுத்தியதனால் இந்திரன் மிகவும் சந்தோஷப் பட்டானாம். அதனால் மழையற்ற கிராமப்புற மக்கள் இத்தகைய கொடும்பாவிகளைக் கட்டி இழுத்து எரித்துவிட்டால் தங்கள் பகுதியில் நீரின் தெய்வமான வருணன் மழை பெய்விக்கச் செய்வான் என்று நம்பி இவ்வாறு செய்து வருகின்றனர்.

**காலந்தோறும் நம்பிக்கைகள்**

1. தொல்காப்பிய காலத்தில் பறவைச் சகுணம் பற்றிய நம்பிக்கைகள் இருந்திருக்கின்றன (தொ -பொருள் -91).
2. கூகை அலறினால் சாவு வரும் என்ற நம்பிக்கை புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது (புறம் -280).
3. காகம் கத்தினால் விருந்தினர் வருவார் என்று குறுந்தொகை தலைவி (குறு -391) நம்பியுள்ளாள்.
4. தும்மல் வந்தால் வேண்டியவர்கள் நினைப்பார் என்ற நம்பிக்கைக்குத் திருக்குறளில் சான்று உள்ளது.
5. பச்சோந்தி இடமிருந்து வலம் சென்றால் நல்ல சகுனம் என்று அறப்பளீச்சுர சதகம் கூறுகின்றது.
6. கனவுகள் பலிக்கும் என்று நம்பி சீதையைத் திரிசடை தேற்றுகிறாள். இடக் கண் துடித்தால் நல்லது நடக்கும் என்று சீதையும் நம்புகிறாள்.
7. "எனது இடது கண்ணும் துடித்தது

   உனைக் கண்டேன்

   இந்நாள் பொன்னாள்"

என்று திரைப்படத்தில் தனது நம்பிக்கை நன்மை பயத்தது என்பதைத் தலைவி தலைவனிடம் சொல்லி மகிழ்கிறாள். (குமரிக்கோட்டம் - திரைப்படம்) ஆகவே தொல்காப்பியர் காலம்தொட்டு இன்றைய திரைப்படக் காலம் வரை நம்பிக்கைகள் நிலவி வருவதைக் காண முடிகிறது.

## நாட்டுப்புற இலக்கியங்களில் நம்பிக்கைகள்

1. கண்ணேறு பட்டால் குழந்தைக்குக் குற்றம் ஏற்படும். ஆகவே மஞ்சளையும், சுண்ணாம்பையும் கலந்து ஆலத்தி சுற்ற வேண்டும் என்பது ஒரு நம்பிக்கை.

"கண்ணான கண்ணார்க்குக்
கண்நோக்கும் வாராமல்
சுண்ணாம்பும் மஞ்சளும்
சுற்றி எறி கண்ணார்க்கு"

- என்று ஒரு தாலாட்டுப் பாடல் குறிப்பிடுகிறது.

2. பல்லிச் சகுனம் ஒரு முக்கியமான நம்பிக்கையாகப் பரவி உள்ளது. இதனை

"மதிலேறும் பல்லிக்கு -ஒரு
வார்த்தைக்கே இடமானேன்
சுவரேறும் பல்லிக்கு -ஒரு
சொல்லுக்கு இடமானேன்"

என்கிறது ஒரு ஒப்பாரிப் பாடல்.

3. பழமொழிகளிலும் நாட்டுப்புற நம்பிக்கைகளைக் கூறும் நயமான பொக்கிஷமாக விளங்குகின்றன.

"ஆனி ஆறாந்தேதி குறுகினால்
அறுபது நாளைக்கு மழை இல்லை"

"ஆடி அமாவாசையில் மழை பெய்தால்
அரிசி விற்ற விலை நெல் விற்கும்"

"ஆவணி மாதம் அழுகைத் தூற்றல்
ஐப்பசியில் அடைமழை பெய்யும்"

"கார்த்திகைக்கு மிஞ்சிய மழையும் இல்லை"

"மார்கழி மழை மண்ணுக்கு உதவாது"

"தை மழை நெய் மழை"

- போன்ற பழமொழிகள் மழை பற்றிய நம்பிக்கைகளாகும்.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" -என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

"ஐந்தாவது பெண் என்றால்
அரசனும் ஆண்டி ஆவான்" - என்பது

குடும்பத்தில் பிள்ளைப்பேறு பற்றிய நம்பிக்கையாகும். ஐந்தாவது பெண்ணாகப் பிறந்தால் அப்பெண் குழந்தைக்கு போதும் பொண்ணு, அஞ்சுகம் என்று பெயர்வைத்து அழைக்கும் வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தில் பொருளாதாரச் சிக்கல் எழும் என்பதால் இவ்வாறு நம்பினர்.

"ஆரு கடன் நின்றாலும்
மாரி கடன் ஆவாது"

என்பது வழிபாட்டு நம்பிக்கை. மாரியம்மன் வழிபாட்டில் எந்தக் குறையும் வைக்கக் கூடாது என்பது பரவலான ஒரு நம்பிக்கை.

தலை எழுத்தை சிரைத்தால் போகுமோ!

என்பது மக்களின் தலையெழுத்து பற்றிய நம்பிக்கையாகும். மக்களின் நன்மை தீமைகளை, உயர்வு தாழ்வுகளை, பாவ புண்ணியங்களை அவர்கள் பிறக்கும் முன்னரே பிரமன் தலையில் எழுதி விடுகிறான் என்ற நம்பிக்கையில் இந்தப் பழமொழி பிறந்து இருக்கின்றது.

4. நாட்டுப்புறக் கதைகளிலும் நம்பிக்கைகள் நிறைந்து காணப்படு கின்றன.

"இருட்டில் சாப்பிடாதே
பேய் பிசாசும் சாப்பிட்டு விடும்"

என்பது நம்பிக்கை. காரணம் இருட்டில் வீட்டின் முகட்டில் உள்ள பல்லி விழுந்து விடலாம். அதனால் சாவு நேரலாம் என்ற பயத்தில் உருவானது இப்பழமொழி ஆகும்.

பல்லி சத்தம், விதவை, அந்தணன், எண்ணெய் விற்பவன், குசத்தி, குருடன் போன்றோர் எதிர்ப்படுதல் பானை உடைத்தல் போன்றவை தீய சகுனங்கள் என்பதற்கு கீழ்க்கண்ட பாடலைச் சான்றாகக் கொள்ளலாம்.

'சொல்ல வொன்று வரும் வேளை
பல்லியது பசிக்காகப்
பற்கடித்துக் கத்துதென்றான்
அடுத்தபடி அறுதலியும்
அப்ப வோர் அந்தணனும்
எண்ணெய் விற்கும் சுப்பனவன்
எதிர் வரவும் கண்டானே
பானை தட்டும் ஒரு குசத்தி
புதுப்பானை ஏற்றி வந்தாள்
பெண்ணொருத்தி செட்டி முன்னே

புதுக்குடத்தைப் போட்டுடைத்தாள்
கண்ணு கெட்ட குருடன் ஒருவன்
கலக்கம் வருதென்று சொல்ல
விரைவாகப் பட்டணத்தை
விட்டவனும் சென்றிட்டான்.'

பொதுவாகப் பொருள் அடிப்படையில் மக்களின் உணவு, உடை, பிறப்பு, திருமணம், சகுனம், கனவு, வழிபாடு, இறப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் நம்பிக்கைகள் நிலவி வருகின்றன.

1. **உணவு தொடர்பானவை**

1. சாப்பிடுகையில் கால்களைக் கையால் பிடிக்கக் கூடாது.
2. உணவு சிந்தக் கூடாது
3. குசு விடக் கூடாது
4. படிக்கக் கூடாது
5. இலையைத் தாண்டக் கூடாது.

2. **உடை தொடர்பானவை**

1. தாண்டக் கூடாது
2. கிழிந்த உடை அணியக் கூடாது
3. கோவிலில் சட்டை போடக் கூடாது
4. ஆடையைக் கடிக்கக் கூடாது

3. **குழந்தை தொடர்பானவை**

1. குழந்தைக்கும் கண்ணேறு கழித்தல்
2. குழந்தைகளைத் தலையில் அடிப்பது தவறு
3. கொடி சுற்றிப் பிறந்தால் தாய் மாமனுக்கு ஆகாது
4. மூலம் அரசாளும்
5. குழந்தைகளைத் தாண்டக் கூடாது
6. குழந்தைகளுக்குக் கண்ணாடி காட்டினால் ஊமையாகும்.

4. **திருமணம் தொடர்பானவை**

1. இரு திருமணங்கள் ஒரு வீட்டில் நடந்தால் ஒன்று சிறக்கும், ஒன்று தாழும்.

2. திருமணச் சடங்குகளில் சுமங்கலிகள் மட்டுமே பங்கு கொள்ள வேண்டும்.

3. திருமணம் முடிந்து வருகையில் பிறந்த வீட்டினின்றும், சிகைக்காய்ப் பொடி, மிளகாய்ப் பொடி ஆகியவற்றைக் கொண்டு வருவது தவறு.

5. **குணங்கள் தொடர்பானவை**

1. காக்கை கத்தினால் விருந்து
2. பூனை தடை தீச்சகுனம்
3. நரித்தடை நல் சகுனம்
4. 'எங்கே போகிறாய்' என்று கேட்டால் தீச்சகுனம்
5. கழுதை கத்தினால் நல் சகுனம்
6. மொட்டச்சி வந்தால் தீய சகுனம்

6. **கனவுகள் தொடர்பானவை**

1. பகல் கனவு பலிக்காது
2. அதிகாலையில் காணும் கனவு பலிக்கும்
3. கனவில் மரணம் என்றால் சுபம், திருமணம் என்றால் இழவு
4. கனவில் மலத்தைத் தொட்டால் பணம் வரும்

7. **வழிபாட்டுத் தொடர்பானவை**

1. சாமியைக் கைசுட்டிக் காட்டினால் கண்ணை அவித்து விடும்
2. சாமி இருக்கும் திசையில் கால் நீட்டக் கூடாது.
3. சாமிக்குப் போட்ட பூவை அடுப்பில் அல்லது ஆற்றில் போட வேண்டும்.
4. சாமி முன்னால் செருப்பு போடக்கூடாது
5. கோவில் நேர்ச்சைகள் தவறக் கூடாது.

8. **பெண்கள் தொடர்பானவை**

1. மாத விலக்கான பெண் பூ வைக்கக் கூடாது
2. பெண்கள் இரவில் அழக்கூடாது
3. பெண்களின் தலைமயிர் முழங்காலுக்குக் கீழே வளரக் கூடாது
4. பெண்கள் இரவில் மல்லாந்து படுக்கக் கூடாது.

9. இறப்புத் தொடர்பானவை

1. சவ ஊர்வலத்திற்கு எதிராகச் செல்லக் கூடாது
2. சனிப்பிணம் துணை தேடும்
3. புதன்கிழமை சாவு நல்லது
4. மரண நாளில் மழை பெய்வது நல்லது
5. மரண வீட்டிற்குச் சென்றுவந்த பின்னர் குளிக்காமல் இருக்கக் கூடாது.

10. நாள் தொடர்பானவை

1. செவ்வாய் அமங்கல நாள்
2. செவ்வாயில் முடிவெட்டுதல் வறுமை தரும்
3. செவ்வாயும் வெள்ளியும் தையல் கூடாது.
4. சனியில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் நல்லது
5. ஞாயிறு வெளியூருக்குச் செல்லலாகாது
6. புதன் பணம் கிடைப்பது நல்லது
7. வெள்ளியன்று கடன் கொடுக்க மாட்டார்கள்.

ஆகவே, ஒரு சமூகமோ அல்லது சமுதாயமோ கிராமிய வாழ்வின் அடிப்படையில் ஏதோவொரு நம்பிக்கைகளின் அடிப்படையில் இயங்குகின்றன் என்பதே எதார்த்தமான உண்மை. பழமையே பொன்னானது. புதுமையிலும் பழமை மறவோம்.

(7) மொழிகளில் தோன்றும் சொற்களை மக்களிடையே அறிமுகப்படுத்தும் பணியைச் செய்பவர் — பயணிகள், பேச்சாளர்கள், அச்சகங்கள், } வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள்.